Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM
DATE: 05.06.2026

Case No : Crl.M.P.No.467/2026
Deposition of Witness : Witness No.7

| | |
|---|---|
| Name அங்காள ஈஸ்வரன் | Father/Husband Name : சிவகுமார் |
| Age : 27 | Village : மேலப்பாளையம் |
| Taluk : பாளையங்கோட்டை | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 05.06.2026

**மனுதாரர் தரப்பில் 7 ஆவது சாட்சியின் முதல் விசாரணை :-**

1. நான் தற்போது மேலப்பாளையத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது எதிரிகளை தெரியும். ம.சா.1 லிங்கதுரை, ம.சா.2 வசந்த் மற்றும் ம.சா.3 ஐகோர்ட் ராஜா, ம.சா.4 இன்பரசன் ஆகியோர்களை தெரியும். திருநெல்வேலியில் உள்ள ம.சா.1ன் வீட்டின் கட்டுமானப் பணியின்போது நான் அங்கே பணியாற்றியுள்ளேன்.

2. கடந்த 21.10.2024 ஆம் தேதி காலை 11 மணியளவில் சாலைப்புதூரில் வேலை பார்க்கச் சென்றோம். அப்போது நாங்கள் கட்டுமானப் பொருட்களை இறக்கி வைத்துக்கொண்டிருந்தபோது, மதியம் 1 மணியளவில் காரில் செல்வராஜ் மற்றும் 3 நபர்கள் வந்து, நீங்கள் யார், இது எங்களுடைய இடம் எனக் கூறி தேவடியா மகனே என்று கெட்டவார்த்தை போட்டு அவதூறாக ஏசினார்கள், பின்பு அங்கே கிடந்த கல், கம்பு ஆகியவற்றை தூக்கி அங்கே நின்றுகொண்டிருந்த எங்கள் மீதும், ம.சா.1, ம.சா.2, 3, 4 ஆகியோர்கள் மீதும் வீசினார்கள். அங்கே பிரச்சனை ஏற்பட்டதால் வேலை பார்த்து கொண்டிருந்த எங்களை அந்த இடத்தை விட்டு கிளம்ப சொன்னார்கள். நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம். எனவே எங்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:55:43 +0530

Judicial Magistrate, Sathankulam.